23rd July 1964]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இன்றைக்கு 8 நாள் 8 நாள் ஆக இருககவேணடும் என்ருல் இந்த மசோதாவற்கு அவசியம் இல்லை. இப்போது இருக்கிற விதிப்படி, சட்டப்படி பொங்கலுக்கு விடுமுறை வேண்டும் என்று கேட்டால் கொடுக்க வேணடும. கேட்டு கொடுப்பதற்கு மறுத்ததாக எந்தவித புகாரும் வரவில்லை. ஆகையால் இந்தச் சட்டத்திற்கு அவசியம் இல்லை என்று சொல்லிக்கொளகிறேன். அநதநத ஸ்தாபனத்தல் இருக்கிற வர்கள் நேரடியாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டிய வஷயம் இது. ஆகையால் இதற்கு அவசியம் இல்லை என்று சொலலிக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Industrial Establishments (National and Festival Holidays) Amendment Bill, 1964 (L.A. Bill No. 5 of 1964) be taken into consideration."

The motion was put and lost.

(3) The Hindu Marriage (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 6 of 1964).

SRI S. MADHAVAN : Sir, I move—

"That the Hindu Marriage (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 6 of 1964) be taken into consideration.

The motion was duly seconded.

MR. SPEAKER : Motion moved—

"That the Hindu Marriage (Madras Amendment) Bill, 1964 (L.A. Bill No. 6 of 1964) be taken into consideration."

* **திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, முதலிலேயே எதிர்க் கட்சி அங்கத்தினரால் கொண்டுவரப்பட்ட மசோதா என்ற நிலை வந்துவிடுமோ என்ற அச்சத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதனுடைய அடிப்படைக் காரணங்களை அமைச்சரும் அரசாங் கமும் பரிசீலிக்க வேண்டும் என்று முதலிலேயே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். என்னுடைய மசோதாவை ஏற்காவிட் டாலும், நான் விசாரித்த வரையில் இப்படிப்பட்ட மசோதாக்கள் வரும்போது அந்தக் கருத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் அரசாங்கமே பரிசீலனை செய்து அந்தச் சட்டத்தை மீண்டும் கொண்டுவருவது முறை என்று தெரிகிறது. அந்த முறையையும் அமைச்சர் யோசிக்க வேண்டுமென்று முதலிலேயே நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்து மதச் சட்டம் 1955-ம் ஆண்டு பாராளுமன்றத்திலே கொண்டுவரப்பட்டது. ஆனல் அதிலே சொல்லப்பட்டிருக்கும் சில கருத்துக்கள் நம் மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு 1949-ம் ஆண்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. 1955-ம் ஆண்டு, பாராளு மன்றத்தில் செய்யப்பட்ட மத்திய சட்டத்தில் சில குறைபாடுகள் இருப்பதாக நம்முடைய சென்னை உயர் நீதி மன்றம் 2, 3 தீர்ப்பு களில் சுட்டிக் காண்பித்திருக்கிறது. இந்தக் குறைபாடுகளை

[திரு. செ. மாதவன்] [23rd July 1964

மற்ற மாநில உயர் நீதி மன்றங்களும் இந்திய தலைமை நீதி மன்றமும் சுட்டிக் காண்பித்ததா, பிரபலித்ததா என்று இது வரையில் எனக்குத் தெரியவில்லை. ஆனல் நம்முடைய சென்னை உயர் நீதி மன்றம் மூன்று தீர்ப்புகளில் சுட்டிக் காண்பித்திருக் கிறது. அதன் விளைவு, பொதுவாக வழக்கு மன்றங்களுக்குச் செல்லுவதில் சில கஷ்டங்களைத் தருகிற சில குறிப்புகள் இருக் கின்றன. அதன் காரணமாகத்தான் இந்த மசோதாவை நான் தயாரித்து இந்த மன்றத்திலே சமர்ப்பித்திருக்கிறேன். இதிலே மூன்று பிரச்னைகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. முதல் பிரச்னை 1955-ம் ஆண்டு மத்திய சட்டத்திலே உள்ள 11-வது பிரிவைப் பொறுத்த அளவுக்கானது. அந்தப் பிரிவிலே எந்தெந்தத் திருமணங்கள் வாய்ட் மேரேஜஸ், அப்-இனிஷ்யோ வாய்ட் மேரேஜெஸ் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வாய்டபிள் மேரேஜெஸுக்கும், வாயட் திருமணங்களுக்கும் வேறுபாடு இருக் கிறது என்று சட்ட அமைச்சருக்குத் தெரியும் என்று நம்புகிறேன். 11-வது பிரிவைப் பொறுத்த அளவுக்கு வாய்ட் மேரேஜெஸ் பற்றிய பிரிவு ஆகும். அதன் விளைவு என்ன என்றுல் திருமணம் செய்தவுடனே, அந்த நிமிஷத்திலேயே அந்தத் திருமணம் சட்ட பூர்வமாகச் செல்லாத நிலை ஏற்பட்டு விடுகிறது. கோர்ட்டுக்கே செல்லவேண்டிய அவசியம் இல்லை. ஆனல் மத்திய சட்டத்திலே ஏதோ காரணத்தைக்கொண்டு கோர்ட்டுக்குச் சென்று இந்தத் திருமணம் செல்லாது என்று டிக்ளரேஷன் பெறவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் ஜுடிஷ்யல் வ்யூ, இது போன்ற அப்-இனிஷ்யோ வாய்ட் திருமணங்களை இக்னோர் செய்து விடலாம் என்பது. நீதி மன்றங்களுக்குச் சென்று டிக்ளரேஷன் பெற வேண்டியதில்லை என்பது ஜுடிஷ்யல் வ்யூ. அப்படி இருந்த போதிலும் கூட, இரண்டாவது திருமணத்திற்கு ஈடுபட்ட நபர்கள் கோர்ட்டுக்குச் சென்று டிக்ளரேஷன் பெறலாம் என்ற வாய்ப்பை மத்தியச் சட்டம் கொடுத்திருக்கிறது. இதனுடைய விளைவு என்ன என்றுல், 11-வது பிரிவிலே உள்ள வார்த்தைகளைப் படித்துப் பார்த்ததில் அதிலே சில டெக்னிக்கல் டிஃபிகல்ட்டிஸ் வரும் என்று நான் கருதுகிறேன். நம் உயர் நீதி மன்றமும் அந்த முறையில் ஒத் துக்கொண்டிருக்கிறது. இந்தப் பிரிவிலே "Any marriage solemnised after the commencement of the Act shall be null and void" என்று இந்த முதல் பகுதியில் எந்தெந்த திருமணங்கள் வாய்ட் என்று டிக்ளேர் செய்திருக்கிருர்கள். இரண்டாவது பகுதி "And may on petition presented by either party there to" என்பதில் எய்தர் பார்ட்டி தேர்டு என்ற வார்த்தை ஆட்சேபணைக்கு உரிய வார்த்தை என்று கருதுகிறேன். இந்த வார்த்தைகள் இந்தச் சட்டத்தில் இருக்கிற காரணத்தினுல் அதனுடைய விளைவு முதல் மனைவியோ அல்லது பல மனைவிகளோ இருந்தால்கூட இந்தச் சட்டத்தின்மூலம் எந்தத் திருமணம் செல்லாது என்று ஏற்படு கிறதோ அந்தத் திருமணத்திற்கு யார் யார் பார்ட்டிகளோ அவர்கள்தான் கோர்ட்டுக்குச் சென்று மனு தாக்கல் செய்யலாம் என்ற நிலை ஏற்படுகிறது. ஆனல், இந்தச் சட்டத்தினுடைய மூல நோக்கம் என்னவென்றுல், இரண்டாவது திருமணம் செல்லாது.

23rd July 1964] [திரு. செ. மாதவன்]

அப்படிச் செல்லாத நிலை எற்பட்டால், அதனால் பாதிக்கப்படக் கூடியவர்களுக்கு நீதி மன்றத்திற்குச் செல்ல பரிகாரம் இருக்க வேண்டும். இது தான் பாராளுமன்றத்தின் நோக்கம், மத்திய சட்டத்தின் நோக்கம். இந்த நோக்கம் இந்தப் பிரிவின்கீழே நிறைவேற்றப்படவில்லை. இந்தப் பிரிவின்கீழே முதல் மனைவி நீதிமன்றத்திற்குச் சென்று மனுச்செய்வதற்கு வாய்ப்பு இல்லை. நமது உயர் நீதிமன்றத் தீர்ப்பிலே ஒரு 'ஆப்ஸெர்வேஷன்' இருக்கிறது. அந்த 'ஆப்ஸெர்வேஷன்' என்ன என்பதை படிக்க விரும்புகிறேன். His wife is not left remedyless முதல் மனைவிக்கு பரிகாரம் இல்லை என்று கூறுவது தவறு. எப்படி என்றால் " She can file a suit under the ordinary law for a declaration that the marriage of her husband with second wife is illegal and void under Act XXV of 1955." முதல் மனைவிக்கு அந்த உரிமை இருக்கிறது. ஆனால், அவள் சிவில் கோர்ட்டிற்குச் செல்ல வேண்டும். காமன் லாவின் கீழே சிவில் கோர்ட்டுக்குச் செல்ல வேண்டும். இந்த 11-வது பிரிவின்கீழ் மனு தாக்கல் செய்ய முடியாது. அதே தீர்ப்பில் உயர்நீதி மன்ற நீதிபதி குறிப்பிட்டிருக்கிறார் " She must pursue the costly remedy of filing a suit under the ordinary law என்று சிவில் கோர்ட்டில் சாதாரணமாக சூட் போடுவது என்றால், அதிலுள்ள கஷ்ட நஷ்டங்களை நமது சட்ட அமைச்சர் அவர்கள் உணர்வார்கள். அந்தக் 'காஸ்டிலி ரெமிடிக்கு' ஏன் செல்ல வேண்டும்? இந்த 11-வது பிரிவின்கீழே அந்த முதல் மனைவிக்கு அந்த உரிமையைக் கொடுக்கக்கூடாதா? இதுதான் என்னுடைய பிரச்னை. இந்தப் பிரச்னையை அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே ஒரு கேள்வியைக் கிளப்பலாம். எதற்காக முதல் மனைவிக்கு இந்த உரிமையைக் கொடுக்கவேண்டும் என்று கேட்கலாம். இதைப்பற்றி நானும் யோசித்துப் பார்த்தேன். என்னால் சொல்லக்கூடிய பதில் எல்லாம், இந்த 'டெக்லரேஷன்' வாங்கிய தேதியிலிருந்து இரண்டாவது மனைவி 'லீகல் ஸ்டேட்டஸை' இழக்கிறாள். அது ஒரு காரணம். இரண்டாவது காரணம், அந்த டெக்லரேஷன் டேட்டுக்குப் பின்னாலே பிறக்கக் கூடிய குழந்தைகள் 'இல்லெஜிடிமேட்' ஆகிறார்கள். 'லெஜிடிமேட்' என்ற உரிமை கொடுக்கப்படமாட்டாது என்பதை இரண்டாவது காரணமாகச் சொல்ல ஆசைப்படுகிறேன். மூன்றாவது, இந்த முதல் மனைவிக்கு உள்ள 'செண்டிமெண்டல் பீலிங்'. இந்த சட்டம் வந்ததற்குக் காரணம் இரண்டாவது கலியாணம் கூடாது, முதல் மனைவியை எங்கேயோ தவிக்கவிட்டு விட்டு, இரண்டாவது திருமணத்தைச் செய்துகொண்டு ஒருவர் வாழ்வதற்கு அனுமதிக்கக்கூடாது என்பதுதான் நம்முடைய சட்டத்தினுடைய உள்நோக்கம். அந்த நோக்கம் பறிக்கப்படுகிறது. அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முதல் மனைவிக்கு அந்த உரிமையைக் கொடுக்கவேண்டும். இந்த 11-வது பிரிவைப் பொறுத்த அளவிற்கு என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதைக் கொண்டு வருவதற்குத்தான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

[திரு. செ. மாதவன்] [23rd July 1964

அடுத்து, இன்னொரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதை 11-ஏ என்ற பிரிவாகச் சேர்க்கவேண்டும் என்றுதான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். பொதுவாக இந்த சந்தர்ப்பத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புவது என்னவென்றால், என்னுடைய திருத்தத்தில் சில 'பார்மல் அமெண்டுமெண்ட்ஸ்' தேவைப்பட்டாலும், அவைகளைக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைக் காரணம் காட்டி இந்த மசோதாவைத் தள்ளி விடக்கூடாது என்பதுதான். 11-ஏ பிரிவு ஒரு முக்கியமான பிரச்னையை நமக்கு நினைவூட்டுகிறது. மத்திய சர்க்கார் சட்டம் கொண்டு வந்தது 1955-ம் ஆண்டில். ஆனால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு 1949-ம் ஆண்டில் இந்தக் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டாவது திருமணம் செய்யக்கூடாது என்று Hindu Prevention of Bigamy and Divorce Act. 1949' -ல் சொல்லப்பட்டிருக்கிறது. 1949-ம் ஆண்டிலிருந்தே இரண்டாவது திருமணம் செய்யக்கூடாது என்று நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு இருக்கிறது. இந்த 11-வது பிரிவு செல்லாத திருமணங்களுக்கு மறுக் கொடுப்பதற்கு இருக்கிறது. ஆனால், 1955-ம் ஆண்டுக்குப் பின்னாலே உள்ள திருமணங்களுக்குத்தான் அது பயன்படுகிறது. ஆனால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்கு 1949-ம் ஆண்டிலிருந்து 1955-ம் ஆண்டு வரைக்கும், 6 ஆண்டுகளாக இப்படிப்பட்ட செல்லாத திருமணங்கள் இருக்கலாம். 'வாய்டு மாரியேஜஸ்' இருக்கின்றன. என்னுடைய ஒரு அனுபவத்தில் பார்த்தேன். ஒரு திருமண சம்பந்தமான வழக்கில் பார்த்த பொழுது இந்த நிலை என்ன என்பது பரிசிலிக்கப்பட்டது. 1955-ம் ஆண்டு மத்திய சர்க்கார் சட்டத்தில் இந்த 1949-ம் ஆண்டு நம்முடைய சட்டம் 'ரிபீல்' செய்யப்பட்டிருக்கிறது. அப்படி "ரிபீல்" செய்யப்பட்ட காரணத்தினால், இடைக்காலத்திலே 6 ஆண்டுகளாக ஏற்பட்ட திருமணங்களுடைய கதி என்ன? அதிலே செல்லாத திருமணங்கள் இருக்கின்றன. அந்த செல்லாத திருமணங்களுடைய பார்டிகள், அந்த நபர்கள், கணவன், மனைவியினுடைய கதி என்ன? இதை சிவில் கோர்ட்டு ஆராய்ந்தது. என்ன முடிவுக்கு வருவது என்று சிவில் கோர்ட்டுக்குப் புரியவில்லை. ஆகையால் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். 11-ஏ என்ற திருத்தத்தின்மூலம் இந்த 6 ஆண்டுகளாகச் செய்யப்பட்ட திருமணங்கள் 'வாய்டு' என்று 1955-ம் ஆண்டு சட்டத்தில் ஆக்கப்பட்டிருந்தால், அந்த நபர்களுக்கு இந்த 1955-ம் ஆண்டு சட்டத்தில் 11-வது பிரிவிலே மனுச் செய்வதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்பதுதான் நோக்கம். ஆகவே 11-ஏ என்ற பிரிவை இதில் சேர்க்கவேண்டுமென்று நான் இந்தத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறேன்.

என்னுடைய மூன்றாவது திருத்தம் 16-வது பிரிவைப் பொறுத்த அளவுக்கு இருக்கிறது. 16-வது பிரிவு மிக முக்கியமான பிரிவு. இது ஏதோ தவறுதலாக மத்திய சர்க்காருடைய சட்டம் கொண்டு வந்தபொழுது ஏற்பட்டுவிட்டது. அதை நிச்சயமாக திருத்த வேண்டுமென்று நான் சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக்

23rd July 1964] *[திரு. செ. மாதவன்]*

கொள்கிறேன். நம்முடைய சட்ட அமைச்சர் பாராளுமன்ற விவாதத்தில் கலந்து கொண்டிருக்கிருர்கள். இந்தச் சட்டத்தை உருவாக்கியதிலே அவர்களும் பங்கு பெற்றிருக்கிருர்கள். அவர்களுடைய பேச்சுக்களையெல்லாம் நான் படித்துப் பாத்தேன். அவர்கள் ஏதாவது இதைப்பற்றி வாதம் செய்திருக்கிருர்களா என்று பார்த்தேன். மற்ற அங்கத்தினர்கள்கூட இந்தப் பிரிவிலே ஏற்படக்கூடிய 'அனுமலி' என்ன என்பதை புரிந்து கொண்டார்களா என்று என்னுலே இந்த பாராளுமன்ற 'ப்ரொஸீடிங்ஸ்'-லிருந்து தெரிந்துகொள்ள முடியவில்லை.

பதினுருவது பிரிவு, 11-வது பிரிவின்படி 'வாய்டு மாரியேஜஸ்' ஆகிவிட்டால், அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளின் நிலையைப் பற்றியதாகும். அந்த நிலை எப்படியிருக்கிறது என்ருல், 11-வது பிரிவின்கீழ் எந்தத் திருமணமாவது செல்லாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டால், அந்தத் திருமணத்தினுடைய கணவன், மனைவி கோர்ட்டுக்குச் சென்று 11-வது பிரிவிலே ஒரு மனுப்போட்டு 'நல் அண்டு வாய்டு டெக்லரேஷன்' வாங்கிவிட்டிருந்தால்தான், அதற்கு முன்னுலே அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் 'லெஜிடிமேட்' ஆக்கப்படுகிருர்கள். இதிலுள்ள அனுமலி என்ன இருக்கிறது என்ருல், அவர்கள் இறுதிவரை கணவன், மனைவியாக சந்தோஷமாக வாழ்ந்துவிட்டு இறந்துவிட்டால், அவர்களுடைய குழந்தைகள் என்ன ஆகிறது என்ருல், இன்றைக்கு இருக்கிற 11-வது பிரிவின்படி அந்தக் குழந்தைகள் 'லெஜிடிமேட்' ஆகாது. அவர்கள் சண்டை போட்டுக்கொண்டு கோர்ட்டுக்குச் சென்ருல், அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் 'லெஜிடிமேட்' ஆகின்றன. அவர்கள் சந்தோஷமாக வாழ்ந்துவிட்டு இறந்தால், அவர்களுடைய குழந்தைகள் 'இல்லெஜிடிமேட்' ஆகின்றன. இது தான் 'அனுமலி' என்று நம்முடைய உயர்நீதி மன்றம் கூறுகிறது.

" It is obvious that obtaining of a decree of nullity is a pre-requisite to the grant of legitimacy of children under Section 16 of the Act is anomalous and could work a great deal of hardship in some cases. என்று நம்முடைய உயர்நீதி மன்றம் கூறியிருக்கிறது. ஆகவே தான் இந்தத் திருத்தத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

இந்த 'அனுமலி' ஏற்பட்டது, இந்தத் தவறு எப்படி ஏற்பட்டது என்பதையும் நான் ஆராய்ந்து பார்த்தேன். நம்முடைய 'ஹிந்து மாரியேஜ் அக்ட்', மத்திய சர்க்கார் சட்டம் இங்கிலாந்திலுள்ள சட்டத்தை பின்பற்றி 'டிராப்ட்' செய்யப்பட்டது. இங்கிலாந்து சட்டத்தின் 9-வது பிரிவை அப்படியே பின்பற்றி இருக்கிருர்கள். " Section 9 of the English Matrimonial Causes Act, 1950-ஐ அப்படியே பின்பற்றியிருக்கிருர்கள். ஆனுல் அந்தப் பிரிவு 'வாய்டபிள் மாரியேஜ்'-க்காக போடப்பட்ட பிரிவு. 'வாய்டு மாரியேஜஸ்'-க்காக போடப்பட்ட பிரிவு அல்ல. நம்முடைய பாராளுமன்றம் 'வாய்டு மாரியேஜஸ்'-க்காக இந்தப் பிரிவை நீட்டியிருக்கிருர்கள், 'எக்ஸ்டெண்டு' செய்திருக்கிருர்கள். ஆகையால் தான் இந்தத் தவறு ஏற்பட்டது. 'வாய்டபிள் மாரியேஜஸ்' என்ருல் நிச்சயம்

[திரு. செ. மாதவன்] [23rd July 1964

'டெக்லரேஷன்' பெறவேண்டும். ஆனால் 'வாய்டு மாரியேஜ்' என்றால் 'டெக்லரேஷன்' பெறத் தேவையில்லை. இது 'ஜுடிஷியல் வியூ'. ஆனால், பெறலாம் 'மே' என்று போட்டிருக்கிறார்கள். Section 9 of the English Matrimonial Causes Act, 1950"-ஐப் பின்பற்றிய ஒரே காரணத்தினால் இந்த வார்த்தைகள் 16-வது பிரிவிலே சேர்க்கப்பட்டன என்று தான் கருதுகிறேன். இந்த 16-வது பிரிவில் 'Where a decree of nullity is granted என்று இருக்கிறது. அப்பொழுது கோர்ட்டுக்குச் செல்லவேண்டும் என்ற நிலை இருக்கிறது. கோர்ட்டுக்குச் சென்று 11-வது பிரிவின்கீழும், 12-வது பிரிவின் கீழும் இந்தத் திருமணம் தவறு, செல்லாது என்று ஒரு 'டெக்லரேஷன்' வாங்கினால் செக்ஷன் 16 செல்லும் என்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. இது இங்கிலீஷ் பாரம்பரியத்தைப் பின் ஏற்பட்டிருக்கிறது. இது இன்கிலீஷ் பாரம்பரயத்தைப் பின் பற்றிய காரணத்தினால் ஏற்பட்ட சிறு தவறு. இதை மாற்றி அமைக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பமாகும். என்னுடைய குறிக்கோள் என்னவென்றால், அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றாலும் சரி, செல்லாவிட்டாலும் சரி, இரண்டாவது திருமணத்தின் மூலமாக பிறந்த குழந்தைகள் லெஜிடிமேட்டாக ஆக்கப்படவேண்டும், அதன் மூலமாக இந்த அநுமலி தீர்க்கப்பட வேண்டும் என்பதுதான். இதை உயர்நீதி மன்றம் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டியிருக்கிறது. "What has been said above is sufficient to indicate the necessity for suitable amendment of Section 16 of the Act" 16-வது பிரிவுக்கு திருத்தம் செய்யப்படவேண்டுமென்பதை உயர்நீதி மன்றம் சுட்டிக் காட்டியிருக்கிறது. 75, லாவீக்லியில் இந்த கேஸ் ரிப்போர்ட்டாகி இருக்கிறது. சட்டம் ஏற்படுத்தா விட்டாலுங்கூட இந்தக் கொள்கைகளையெல்லாம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி ஹிந்து லா திருமணங்களைப் பொறுத்தவரையில் நமக்கும் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறது. இந்த மன்றத்திற்கும் ஜூரிஸ்டிக்ஷன் இருக்கிறது. ஆகவே, ஒரு திருத்தச் சட்டத்தைக் கொண்டுவரலாம். ஆனால் அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது, இந்தக் கொள்கை பொதுவாக இந்திய நாடு பொழுது, இந்தக் கொள்கை பொதுவாக இந்திய நாடு முழுவதிலும் இருப்பதினால் மத்திய சர்க்காரின் கருத்தைக் கேட்டுக் கொள்வது நல்லதென்று சொல்வார்கள். நமது சட்ட மன்றத்திற்குள்ள உரிமையை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம். அப்படிச் செய்ய விரும்பாவிட்டால் இந்தத் திருத்தங்களை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்வதற்காகவாவது அமைச்சரவர்கள் முயற்சிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கும் எங்களுடைய கழகத்தைச் சார்ந்த திரு. மாதவன் அவர்கள் இதிலே இருக்கிற நுணுக்கங்களையெல்லாம் சபை முன்பு எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் ஒரு சமுதாய சீர்திருத்தச் சட்டமாகும். இதனால் மிகவும் பாதிக்கப்படுகிறவர்கள், நிவாரணம்

அளிக்கப்பட வேண்டியவர்கள் பெண்பாலர்தான். பெண்களுடைய நலனுக்காகத்தான் இந்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறதே தவிர, வேறு காரணத்திற்காகவல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாகரிகம் வளர வளர இத்தகைய சட்டங்களும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே வருகின்றன. பழங்காலத்தில் ஒருவர் பல மனைவிகளை மணக்கலாமென்று சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டது. ஆனால் பெண்கள் சமுதாயம் இதனை எதிர்த்துப் போராடிய பிறகு ஒருவருக்கு ஒருத்திதான் என்ற சட்டத்தை நம்முடைய நாட்டிலே இப்பொழுது பின்பற்றி வருகிறோம். 1955-ஆம் ஆண்டிலே இந்து விவாகச் சட்டத்தை நமது பாராளுமன்றம் இயற்றியிருக்கிறது. இரு தாரத்தைத் தடை செய்யவேண்டும். ஒரு நபர் ஏற்கெனவே திருமணமாகியிருந்து அவர் ஒரு மனைவியோடு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிற சமயத்தில் அவர்களுக்குள்ளே ஏற்படுகின்ற மனச் சங்கடங்கள் காரணமாகவும், அந்த மனைவி பிடிக்கவில்லை, வேறு ஒரு இளம் மனைவி தேவையென்ற நப்பாசைக் காரணமாகவும் முன்பிருக்கிற மனைவியை மறைத்துவைத்துவிட்டு புதிய மாப்பிள்ளையாக வந்து புதிய திருமணம் செய்துகொள்கிறார்கள். இது சமுதாயத்தில் ஏற்படுகிற ஒரு குறைபாடு. இதை நிவர்த்திக்கவேண்டுமென்றுதான் பாராளுமன்றத்திலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நமது சட்டசபையிலுங்கூட 1949-வது ஆண்டில் மதராஸ் பிரிவென்ஷன் ஆப் பிகமி ஆக்ட் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். சட்டம் என்று போட்டுவிட்டால் எல்லோரும் அதன்படி நடப்பார்கள் என்ற நியதியல்ல. சில இடங்களிலே தவறுகள் ஏற்படலாம். ஒரு ஆள் ஒரு மனைவியை மணந்துவிட்டு அல்லது இரண்டு மனைவிகளை மணந்துகொண்டு விட்டு, மூன்றாவது தடவை மணக்க விரும்புகிறார் என்று வைத்துக் கொள்வோம். என்ன காரணத்திற்காக அவர் அவ்வாறு செய்கிறார் என்று பார்த்தால் பணத்தின் காரணமாக அப்படிச் செய்யலாம்.

MR. SPEAKER : Effect of the marriage may be left to the concerned parties.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பல காரணங்கள் இருக்கலாம். ஒன்று ஆசையின் காரணமாக இருக்கலாம், அல்லது பணத்தின் காரணமாக இருக்கலாம்.

MR. SPEAKER : The hon. Member need not dilate on that point.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பெண்களுக்கு இழைக்கப்படுகிற கொடுமைகளை ஒழிப்பதற்குத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இப்படி இரண்டாவது மூன்றாவது திருமணங்கள் செய்துகொள்வது முதல் மனைவிக்கு இழைக்கின்ற துரோகம் ஆகும். முதல் மனைவியை ஒதுக்கிவைத்துவிட்டு ஒரு ஆண் இன்னொரு மனைவியோடு திருமணம் செய்துகொள்கிறார் என்றால், அந்த முதல் மனைவிக்கு பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தின்படி இந்தத் திருமணம் சமபந்தமாக வரும் வழக்குகளை விசாரிக்கவேணடிய பொறுபபை ஜில்லா நீதிபதிககுக் கொடுத்திருக்கிறாகள். அதுகச் செலவில்லாமல ஒரு பெட்டிஷன போட்டால் அதை விசாரிக்கலாம். டைவோர்ஸ் பெட்டிஷனே அல்லது ரெஸ்டிட்யூஷன் ஆப் காஞ்சூகல் ரைட்ஸ் எனபதற்கோ மனுப்போடலாம. 10 ரூபாய் கட்டணம் செலுத்தி மனுப்போட்டால் போதும். அவவாறு பத்து ரூபாய் கட்டணததில் நியாயம் வழஙக வேண்டும் எனபதறகாக ஏற்படுத்தபபட்ட ஒரு சட்டம் அது. இரண்டாம் தரம் மணம் செய்துகொள்கிறார் எனறால், ஆணுக இருந்தாலும் சரி, பெண்ணுக இருந்தாலும் சரி, முதல் திருமணத்தை மறைதது விட்டு முதல மனைவிககுத் துரோகம் செய்யவேண்டும் எனற எண்ணததில்தான் செய்கிறார்கள். அப்படி இரண்டு பேர்களும் சேர்ந்து செயகிற ஒரு காாயத்திற்கு அவர்களை எப்படி மனுப் போடுவார்கள்? ஒரு லட்ச ரூபாய கிடைக்குமென்று இருந்தால் முதல் மனைவியை மறைத்து வைத்துவிட்டு இரணடாவது மனைவியை ஒருவன் கட்டிக்கொள்கிறான் என்றால், கணவன் எப்படி அந்த லட்ச ரூபாயை இழப்பதற்கு முன்வருவான்? இரண்டாவது மனைவியும் எப்படி நாங்கள் இரணடு பேரும் முதல் மனைவியிருக் கும்பொழுதே கல்யாணம் செய்துகொணடோமென்று சொலல முன்வருவாள்? ஆகவே, இந்த உரிமை யாருக்குக் கொடுக்க வேண்டுமென்றால், பாதிக்கப்பட்ட பெண்ணுக்குத்தான் கொடுக்க வேண்டும். இரண்டு பேரும் சேர்ந்து சூழ்ச்சி செய்து அந்தத் திருமணம் நடப்பதால், இரண்டாவது திருமணத்தை செய்து கொள்கிறவருக்கு இந்த உரிமையைக் கொடுப்பதில் நியாயமில்லை. இதை உயர்நீதிமன்றம் நன்கு சுட்டிக் காட்டி இந்த உரிமையை பாதிக்கப்பட்டவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லி யிருக்கிறது. இரண்டாவது திருமணம் செய்வதினாலே பயன் அடைகிற பார்ட்டி ஒருபொழுதும் கோர்ட்டுக்குப் போக மாட்டார்கள். ஆகவே தான் திரு. மாதவன் அவர்கள் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது ஒரு சிறந்த திருத்தம் ஆகும். திராவிட முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த வர்கள் கொடுத்திருக்கிறார்களே, எதிர்க்கட்சிகள் எதைக் கொடுத் தாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்ற மனப் பான்மையில் இதை எடுத்துக்கொள்ளாமல், அரசாங்கத் தரப்பிலே கூட நாங்கள் இம்மாதிரி ஒரு திருத்தத்தைக் கொண்டுவருவதாக இருக்கிறோம், நீங்கள் இதை வற்புறுத்தவேண்டாமென்று சொன்னாலும், அதை நாங்கள் போற்றுவோம். அரசாங்கத் தரப்பிலே இதைப் பரிசிலனை செய்து ஒரு திருத்த மசோதாவைக் கொண்டுவரவேண்டும். அதற்கு சட்ட அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஹிந்து மேரிஜ் சட்டத்தில் உள்ள 16-வது பிரிவுக்கு ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஒரு கல்யாணம் நடைபெறுகிறது என்று வைத்துக்கொள்வோம். அது சட்டப்படி நடந்தாலும் அல்லது வேறுவிதமாக நடந்தாலும், ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்து திருமணத்தை நடத்திக் கொள்கிறார்கள். சட்டத்தின் வாயிலாக அது செல்லாமல் இருக்

கலாம்; சமுதாயம் அதை அங்கீகரிக்காமல் இருக்கலாம். வேறு ஜாதியைச் சேர்ந்தவர்களைக் காதல் புரிந்து திருமணம் செய்து கொண்டிருக்கலாம். ஆனால் அவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகளை சட்டத்தின் எல்லைக்குட்பட்டு நடைபெறுகிற திருமணத்தின் வாயிலாகப் பிறக்கும் குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டியது சமுதாயத்தின் கடமையாகும். அது அரசாங்கத்தின் கடமையும் ஆகும். ஒரு தகப்பனே அல்லது தாயோ தவறு செய்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அந்தத் தண்டனையை அனுபவிக்க வேண்டுமென்றால் அது நாகரிகம் வளர்ந்த ஒரு சமுதாயத்தில் ஒப்புக்கொள்ள முடியாத ஒரு கொள்கையாகும். ஆகையினால்தான் தவறு செய்கின்றவர்களைத் தண்டிக்கலாம் என்று இருக்கிறது. இருதார மண சட்டத்தை மீறி செய்திருந்தால் இண்டியன் பீனல் கோட்படி வழக்குப் போடலாம். பெட்டிஷன் போட்டு டைவர்ஸ் செய்யலாம். ஆனால் பிறக்கின்ற குழந்தைகள் என்ன ஆவது? அவர்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின், சமுதாயத்தின் பொறுப்பு அல்லவா? திருமணம் சட்ட பூர்வமாக நடக்காமல் இருக்கலாம். முறைப்படி நடக்காமல் இருக்கலாம். ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொரு மனைவியாக பல பெண்களை மணந்து ராஜாக்களைப்போல் இருக்கலாம். ஆனால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. திருமணம் சட்டப் பூர்வமானதாக இல்லாமலும் சம்பிரதாயப்படி இல்லாமலும் சமூகத்தில் ஒப்புக்கொள்ளப்படாததாகவும் இருக்கலாம். அப்படிப்பட்ட குற்றங்களைத் தாய் தந்தையர்கள் செய்தார்கள் என்பதற்காக பிறக்கின்ற குழந்தைகளைத் தண்டிக்க முடியாது. அவைகள் பிறக்கும்போதே கிரிமினல் மைண்டோடு பிறக்கவில்லை. அப்படிப்பட்ட மேரேஜுகள் வாய்டு, அப் இனிஷியோ என்று தீர்ப்புகள் கொடுத்த பிறகு பிறக்கின்ற குழந்தைகளைத் தண்டிக்காமல் அந்தக் குழந்தைகளுக்கு சமுதாயத்திலே அந்தஸ்து கொடுத்து தகப்பனின் சொத்துக்கு வாரிசுகளாக ஆக்க வேண்டும் என்று நண்பர் மாதவன் கூறுகிறார்கள். ஆகவேதான் இந்தப் பதினோராவது, 16-வது செக்ஷன்களைத் திருத்த வேண்டும் என்று கொடுத்திருக்கிறோம். அப்படிப்பட்ட திருத்தங்களைப் பாராளுமன்றத்திலே செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொல்லலாம். பாராளுமன்றத்திலே செய்வது என்றால் அதற்குப் பல முறைகள் இருக்கின்றன. ஆனால் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் நமக்கு இருக்கக்கூடிய தகராறுகளைத் தீர்க்க தக்க திருத்தங்கள் செய்ய இந்த மாமன்றத்திற்கு நிறைய அதிகாரம் இருக்கிறது. ஆகையினால் பாராளுமன்ற சட்டத்திற்கு ஒரு அமெண்டிங் சட்டத்தை இந்த மாமன்றத்திலே ஏற்றுக்கொள்வதன் மூலம் நம்முடைய மாநிலத்திற்கும் மக்களுக்கும் அரசாங்கம் நல்ல பெயர் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வை. சங்கரன்: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கும் கனம் அங்கத்தினர் மாதவன் அவர்களுடைய நோக்கங்களை மிகவும் வரவேற்கிறேன். அவர் இந்தத் திருத்தங்கள் எல்லாம் மிக்க தேவையானது என்று காட்ட

பெருமுயற்சி எடுத்திருக்கிருர்கள். ஆனுல் அதற்கு நான் ஆதரவு கொடுக்க முடியவில்லை. காரணம் என்னவென்ருல் இப்படிப்பட்ட திருத்தங்கள் வரவேண்டிய ஃபோரம் பெரும்பாலும் பார்லி மெண்டில்தான். இங்கே கொண்டு வருவது அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். அடுத்தபடியாக இப்பொழுது இந்துச் சட்டத்தையே கோடிஃபை பண்ண வேண்டும். எல்லா இடங் களுக்கும் அது ஒன்ருக இருக்கவேண்டும். தனித்தனியாக இருக்கக் கூடாது என்று எடுக்கப்படுகிற முயற்சியை எல்லோரும் ஒத்துக்கொண்டிருக்கிரும். அகில இந்தியாவுக்கும் இந்துச் சட்டம் ஒரே மாதிரியாக செய்ய வேண்டும் என்பது பார்லி மெண்டின் நோக்கம். அதை எல்லோரும் ஒத்துக்கொண்டிருக் கிருர்கள். இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் திருத்தங்கள் மெயின் சட்டத்துக்குச் செய்ய வேண்டியவை. அதை சென்னை மாகாணத்துக்கு மட்டும் என்று செய்து கொள்ளாமல் வேற்று மைக்கு இடம் கொடுக்காமல் அகில இந்தியாவுக்கும் ஒன்ருக இருக்கும் வகையில் பாராளுமன்றத்தில் திருத்தலாம். நோக்கங்கள் நல்லவைதான். ஆனுல் சென்னை ஹைகோர்ட்டிலே லாகுனவை எடுத்துக் காட்டியிருக்கிருர்கள். அது அகில இந்திய சட்டத்திலே உள்ள லாக்குன. மெட்ராசுக்கு மாத்திரம் இருக்கும் ஓட்டை இல்லை. பாராளுமன்றத்திலும் திரு. மாதவன் கட்சியைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருக்கிருர்கள். அவர்களுக்கும் பூரண அவகாசம் இருக்கிறது. இவைகள் நியாயமான திருத்தம் என்பதனுல் இதில் ஆளும் கட்சி ஆளாத கட்சி என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. பாராளுமன்றத்திலேயே கண்டிப்பாக நிறைவேற்ற ரம்டியும். அவர்கள் கோருகிற 11, 11(எ), 16 ஆகிய மூன்று செக்ஷன்களும் திருத்தப்படலாம்.

இன்னென்று, 49-ல் பிகமி என்பது சட்ட விரோதம் என்று சட்டம் செய்திருக்கிரும். பின்னுல் 55-ல் மத்திய சட்டம் வந்த பொழுது இந்த சட்டம் ரிபீல் ஆகிவிட்டது. இதற்கிடையே இந்த 6 வருஷ காலத்தில் நடந்து இருக்கக் கூடிய அபன்ஸ்கள் என்ன ஆவது என்று கேட்டார்கள். இவ்வளவு நாட்களில் நடவடிக்கை எடுக்காமல் இருந்து இருக்க மாட்டார்கள். 100-க்கு 95 பேர் நடவடிக்கை எடுத்திருப்பார்கள். திரு. மாதவன் அவா களுடைய நோக்கம் நல்லதுதான். ஆனுல் சென்ட்ரலைஸ்ட் ஆக்ட் ஆக இருப்பது நல்லது. விட்டுப் போன கேஸ்கள் இருக்கலாம். அதற்கு என்ன செய்வது என்று அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். ஒரே சென்ட்ரல் ஆக்டாக இருப்பதுதான் நல்லது. ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் ஏற்றபடி ஆளுக்கு ஒன்ருகச் செய்து கொண்டு போவது என்பதனுல் சட்டத்தின் ஆப்ஜக்ட் ஃப்ரஸ்ட்ரேட் ஆகிவிடும். ஆகவே அந்த முறையில் பாராளுமன்றத்திலேயே திருத்தம் செய்யலாம் என்று சொல்லி இதற்கு நான் ஆதரவு கொடுக்க முடியவில்லை என்று சொல்லிக்கொண்டு உரையை முடிக்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் சபாநாயகர் அவர்களே, முதன் முதலிலே கனம் மாதவன் அவர்கள் இவ்வளவு கருத்தாக இந்தச் சட்டத்தை அலசிப்பார்த்து, கொண்டு

23rd July 1964] [கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்]

வந்திருக்கக்கூடிய பல திருத்தங்களும் எந்த முறையில் அமைந்திருக்கின்றன என்று விளக்குகிறேன். அதற்குப் பிறகு சர்க்காருடைய நிலைமை என்ன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

முதலிலே அவர்களுடைய பில்லிலே கிளாஸ் ஒன்றை எடுத்துக் கொண்டால் 1949-ம் வருஷத்திய சட்டப்படி மறு விவாகம் செய்து கொண்ட தம்பதி ஒருவருக்கு அப்பொழுது கொடுக்கப்பட்ட உரிமை கோர்ட்டுக்குச் சென்று "நல்லிடி" வாங்கலாம் என்பது. பிறகு 1955-வது வருஷ சட்டப்படி, அந்தச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு, நல்லிடி பெட்டிஷன் மூலமாக வாங்கலாம் என்பது நாம் செய்திருப்பது. திரு. மாதவன் அவர்கள் கோருகிறார்கள். 1955-ம் ஆண்டில் இருக்கும் சட்ட உரிமை 1949-ல் இருந்து ஏற்பட்ட திருமணங்களுக்கு, தம்பதிகளுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பது Have I understood you correctly,

Madhavan?

திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, 1949-ம் ஆண்டில் இருந்து 1955 வரைக்கும் பல வாய்ட் மாரிஜஸ் இருக்கின்றன அந்த சட்டம் ரிபீல் ஆகி விட்டதால் அதன் விளைவாக இடையில் 6 ஆண்டுகளில் நடந்த. . . .

The Hon. Sri R. VENKATARAMAN : That is the second point which you have raised. May I speak in English, because it is a legal question. The first point is that the marriages solemnised before the commencement of the 1955 Act, which could be set aside as nullity under the 1949 Act is without remedy. So far as the remedy is concerned, Sri V. Sankaran has explained that between 1949 and 1955, if there was sufficient time to take recourse to the remedies available, and if they did not take recourse to such remedies that are available, it would be presumed that they did not want any remedy. That is another point and it is a valid point. In spite of the repeal of 1949 Act, under Section 6 of the General Clauses Act any rights which have accrued before repeal are always to be found even now. That is what I want to clearly point out to Sri S. Madhavan. I shall read Section 6 of the General Clauses Act—

" Effect of repeal : 6 Where this Act, or any (Central Act) or Regulation made after the commencement of this Act, repeals any enactment hitherto made or hereafter to be made, then, unless a different intention appears, the repeal shall not—

(*c*) affect any right, privilege, obligation or liability acquired, accrued or incurred under any enactment so repealed; "

Therefore, my submission is that the rights that existed in the 1949 Act are preserved in the Hindu Marriages Act. Therefore, it is not necessary to amend this law and provide remedy which is already there. I trust that I have made myself clear. The point here is whether the people who had the right under the 1949 Act to make the marriage declared void can continue to have their right in spite of the repeal of 1949 Act and Hindu Marriages Act 1945. They are governed by the General Clauses Act, Section 6

which provides notwithstanding repeal any rights obligation which have already accrued can still be agitated. Then they will to agitate according to the procedures laid down in the original Act

SRI S. MADHAVAN : Is there any provision in 1949 Act for declaring marriages void?

THE HON. SRI R. VENKATARAMAN : It is only by suit. That is what the High Court has also held in the case of Lakshmi-ammal versus Ramaswamy. The rights already existed in the 1945 Act could have been agitated between 1949 and 1955. Now, even after the repeal, any rights, obligation or liability acquired, accrued or incurred between the years 1949 and 1955, it is still open by virtue of Section 6 of the General Clauses Act. It can be agitated and got remedied by way of suit. Therefore, my submission is that it is neither necessary to amend it nor would it be right to amend a particular section of the Hindu Marriages Act.

So far as amendment to Section 16 is concerned, it has got to be separated into two folds. Void marriages come under Section 11 and voidable marriages come under Section 12. So far as marriages which are voidable under Section 12 is concerned, one must get a declaration that the marriage is void, otherwise law presumes not only marriages valid, but also children born out of that marriage valid. The legal presumption is that they are valid and legitimate. So far as Section 16, which deals with section 11, viz., void marriages are concerned, there is a valid point which Sri S. Madhavan has made. Because if we say that the marriage is *ab initio* void, there is no declaration that the children are legitimate. The children born out of such a union will be deemed to be legitimate. My respectful submission is that it not only affects Madras but the whole of India. The matter relating to marriages throughout the country should be raised in the Parliament and not here. The hon. Member belongs to a party, which has got its representatives in the Parliament. Easily they can agitate there. It is not possible for the State to do it. We have to get the concurrence of the Government of India and the question will have to be examined. Therefore, I submit that the proper forum for raising the point about the void marriages is the Parliament and therefore, I request the hon. Member to see the usefulness of bringing it in the Parliament and not in this House. If anything has to be done by this Government, we will certainly write to the Government of India and point out that during the discussions in the Madras Legislature, this lacuna has been brought out and it may be taken note of by the Government of India and they may do something to rectify the lacuna.

SRIMATHI T. N. ANANDANAYAKI : With regard to the *ab initio* marriages, there is provision in the Criminal Procedure Code for maintenance. . .

SRI V. KRISHNAMOORTHY : Maintenance is quite different.

23rd July 1964]

MR. SPEAKER : The hon Lady Member is asking whether the Hon. Minister would clarify the position. The hon. Member Sri V. Krishnamoorthy is not the Minister. Therefore, I request the hon. Member to resume his seat.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I am afraid the hon. Member, Sri Madhavan, has not looked into Section 16 of the Hindu Marriage Act. It arises in a different context altogether. The context there is that unless by a suit it was declared legitimate, it would be deemed to be illegitimate and in the case of void marriages, no suit may be laid and parties may continue to live as spouses in spite of the fact that it is a void marriage. But what is to happen to the children of those parties whose marriage has been declared void when they claim the property of their fathers or the persons concerned? Also another agnate or cognate of those parties will come and say that these are illegitimate children and they are not entitled to property rights except maintenance. My view is that they are entitled to a share in the property. They are not merely asking for some maintenance rights. Therefore, there is a lacuna, as they have combined sections 11 and 12 which are two sections. Section 11 deals with the void marriage and section 12 deals with the voidable marriages. So this is a matter which may be taken up with the Government of India.

SRI S. MADHAVAN : Sir, the Hon. Minister has not answered my first point. Under section 11, who are the parties who can file a petition?

THE HON. SRI R. VENKATARAMAN : Parties are spouses. That is what the 1949 Act says. We cannot, by a subsequent legislation, enlarge the scope of an Act which has been repealed. The spouses there only means husband and wife and nobody else.

SRI S. MADHAVAN : Sir, the Hon. Minister has not read Section 11. I have moved an amendment to Section 11. It refers only to the 1955 Act and not to the 1949 Act. Who are the parties who can file the petition?

THE HON. SRI R. VENKATARAMAN : The 1955 Act provides that the second wife or the next spouse can file a petition. If we look at section 11, we will find that either party, that is husband or wife, may present a petition. Section 11 says—

'Any marriage solemnized after the commencement of this Act shall be null and void and may, on a petition presented by either party thereto, be so declared by a decree of nullity if it contravenes. . .'

So, according to this provision, husband or wife can file it. What the hon. Member wants is that the first wife should file it. As I said, this is a matter in which the Government of India has laid down a policy for the whole of India and we cannot by any legislation think of changing the structure of the Hindu Marriage Act.

SRI S. MADHAVAN : Mr. Speaker, Sir, will the Hon. Minister give an assurance that he will take up this matter with the Central Government?

THE HON. SRI R. VENKATARAMAN : There is no such assurance. All that I can say is that in a discussion which arose in the Legislative Assembly of Madras, a lacuna to a part of Section 16 of the Act—the only point which I accept—has been brought to our notice and the Government of India may examine this matter and let us know their position.

SRI S. MADHAVAN : Sir, in view of what the Hon. Minister has stated just now, I beg leave of the House to withdraw the motion.

The motion was by leave withdrawn.

(ii) RESOLUTIONS.

(1) AMENDMENT OF THE CONSTITUTION OF INDIA FOR REMAINING THE STATE OF MADRAS AS TAMILNAD.—*cont.*

MR. SPEAKER : The next item is the Resolution regarding Amendment of the Constitution of India for re-naming the State of Madras. This resolution was taken up for consideration on 24th January 1964 and the hon. Member, Sri Dakshinamoorthy Gounder stopped his speech half-way. Now if he wants to say anything
11-00 a. m. more, he can continue his speech.

* திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் : சட்டமன்ற தலைவர் அவர்களே, தமிழ் கூறும் நல் உலகத்துக்கு தமிழ் நாடு என்று பெயரிட்டு அழைக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் திரு. இராம அரங்கண்ணல் கொண்டு வந்த தீர்மானத்தைப்பற்றி நான் என்னுடைய கருத்தைச் சொல்லி யிருக்கிறேன்.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை.)

இருந்தாலும்கூட அதைத் தொடர்ந்து சில கருத்துக்களை இன்று சொல்ல ஆசைப்படுகிறேன். நாடு என்ற சொல் இலக்கிய வழக்கிலோ பேச்சு வழக்கிலோ பலவகையாக உபயோகத்தில் இருந்து வந்திருக்கிறது என்பதை சில ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டி அன்று இந்தச் சபை முன்னே சொல்லியிருக்கிறேன்.

சாதாரணமாக நாடு என்ற சொல் சிறிய நிலப் பரப்புக்கும், அதே சமயத்தில் ஒரு பெரிய நிலப் பரப்புக்கும் வழங்கப்பட்டிருக் கிறது என்பதை பல இலக்கியங்களில் பார்க்கிறோம். பேச்சு வழக்கிலும் பார்க்கிறோம் என்றாலும்கூட இன்றைக்கு இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றால் அதன் நோக்கம் என்ன? என்ன உணர்ச்சியோடு இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நாம் ஆலோசித்துப் பார்த்தோ மானால் இந்தத் தீர்மானத்தை இப்போது கொண்டு வரவேண்டிய